




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







## அதிகரிக்கிறது மின்கட்டணம்

இம்மாதம் முதல் செலவு அடிப்படையிலான மின்சார கட்டணத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மின்சாரத் துறைக்கான பொதுக் கொள்கை வழிகாட்டு நெறிமுறைகளைத் திருத்துவதற்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின் கட்டணத்தை அதிக சதவீதத்தினால் அதிகரிப்பதற்கான யோசனை கடந்த வாரம் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. இந்த முன்மொழிவு மக்களிடையே கடும் அதிருப்தியை சந்தித்தது.

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக 69 இலட்சம் பேரின் கையொப்பத்துடன் கூடிய பொது மனுவொன்றுக்கான முதற்கட்ட கையொப்பம் நேற்று (09) மின்சார பாவனையாளர்கள் சங்கத்தினால் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது. மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கினாலும் அது நடைமுறைப்படுத்தப்படாது என ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்கு

புகையிரத அதிகாரிகளுக்கும் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கும் இடையில் இன்று (10) காலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள்சேர்ப்பது தொடர்பில் கலந்துரையாடப்படும் என புகையிரத பொது மேலாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ்.குணசிங்க தெரிவித்தார்.

சேவையின் தேவையின் அடிப்படையில் அவர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ள பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி இன்று கிடைக்கப்பெறும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் 31 ஆம் திகதி புகையிரத சேவையில் இருந்து சுமார் 450 பேர் ஓய்வு பெற்றதையடுத்து. அத்தியாவசிய சேவைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் சுமார் 400 ஊழியர்களை மீளப் பணியமர்த்த புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட சட்டங்கள்



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட சட்டங்கள் கொண்டுவரப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவடைந்ததையடுத்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில், அமைச்சில் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அதற்கான சட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, இந்த ஆண்டு தொழிலாளர் சட்டக் குறியீடு ஒன்று தயாரிக்கப்படவுள்ளதுடன், அதில் தோட்டத் தொழிலாளர்களுக்கான விசேட சட்டங்களை உள்ளடக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில், தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ள கடிதங்கள் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளமையினால் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தோட்டத் தொழிற்சங்கங்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழில் திணைக்களத்தினால் அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும் தமிழிலும் அனுப்பப்பட வேண்டுமென அமைச்சர் உரிய கலந்துரையாடலில் பணிப்புரை விடுத்துள்ளார்.

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை - 2021 பெறுபேறு வெளியிடப்படாமை கவலையளிக்கிறது - பரீட்சாத்திகள்

(நூருல் ஹுதா உமர்)




2021 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) (Sri Lanka Teacher Educator Service (Limited) Competitive Examination - 2021) பரீட்சையின் பெறுபேறுகள் ஒரு வருட காலமாகியும் இதுவரையில் பரீட்சை திணைக்களத்தினால் அல்லது கல்வி அமைச்சினால் வெளியிடப்படாமல் உள்ளமை குறித்து பரீட்சாத்திகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாரிய பொருளாதார ரீதியான சிரமத்திற்கு மத்தியில் குறித்த பரீட்சையினை நம்பிக்கையோடு எழுதிய பரீட்சார்த்திகளின் முடிவை சுமாராக ஒரு வருட காலம் தாமதப்படுத்துவது அவர்களின் சட்ட ரீதியான எதிர்பார்ப்பை (Legitimate Expectation) மழுங்கடிப்பதாக அமைகின்றதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் காணப்படுகின்ற 19 கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து ஆசிரியர் பல்கலைக்கழகம் உருவாக்க உள்ளதாக அண்மையில் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்திலே தெரிவித்து இருந்தார். உண்மையில் எமது நாட்டில் இவ்வாறான ஒரு பல்கலைக்கழகத்தினை அமைப்பது அதில் கல்வி கற்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே குறித்த மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரியர் கல்வியியலாளர் சேவை பரீட்சையினை எழுதிய ஆசிரியர்களினது பெறுபேற்றை உடனடியாக கல்வி அமைச்சு வெளியிட்டு அவர்களை நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதன் மூலம் குறித்த ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் பொறுப்பான அமைச்சரிடம் இது தொடர்பான பதிலை எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் திறந்த போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளபோதிலும் அது தொடர்பிலும் எதுவிதமான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தான் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் மூலம் ஆசிரியர் கல்வியலாளர் சேவைக்குள் உள்வாங்கப்படுவதானது புதிய வகை நியமனமாக அமையாது என்பதால் அதனை உடனடியாக வழங்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரீட்சாத்திகள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இன்று பலமான காற்று வீசும் – மீனவர்களுக்கு எச்சரிக்கை

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஊவா மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசந்துறையில் இருந்து மன்னார் மற்றும் புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. காங்கேசந்துறையில் இருந்து மன்னார் மற்றும் புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

## நீதிபதியாகப் பொறுப்பேற்று பெருமை தேடித்தந்த இந்த வம்சாவளிப் பெண்



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மன்பிரீத் மோனிகா சிங், அமெரிக்காவின் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்று அந்நாட்டின் முதல் சீக்கிய பெண் நீதிபதி என்னும் பெருமையைப் பெற்றுள்ளார்.

மோனிகா சிங்கின் பெற்றோர் 1970 களில் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர். டெக்சாஸ் மாகாணத்தின் ஹூஸ்டன் நகரில் மோனிகா பிறந்து வளர்ந்தார்.

சட்டக் கல்வி முடித்து, 20 ஆண்டுகளாக வழக்குரைஞராகப் பணியாற்றி வந்த அவர் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அளவிலான பல்வேறு மனித உரிமை அமைப்புகளில் பங்காற்றியுள்ளார். இந்நிலையில், டெக்சாஸ் மாகாணம் ஹாரிஸ் மாவட்ட சிவில் நீதிமன்றத்தில் நீதிபதியாக கடந்த வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமெரிக்காவின் முதல் சீக்கிய பெண் நீதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்ட மோனிகா சிங் கூறும்போது, 'இது எனக்கு மிகப் பெரிய பொறுப்பாகும். அதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்' என்றார். டெக்சாஸ் மாகாணத்தின் முதல் தெற்காசிய வம்சாவளியைச் சேர்ந்த நீதிபதியான ரவி சாண்டில் தலைமையில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

அப்போது ரவி சாண்டில் கூறியதாவது, 'சீக்கியர்களுக்கு இது மாபெரும் தருணம். தங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை இத்தகைய உயரிய பொறுப்புகளில் காணும்போது மக்கள் தங்களுக்கும் வாய்ப்பு உள்ளதை எண்ணி ஊக்கமடைவர். சீக்கியர்களுக்கான அடையாளம் மட்டுமல்ல, அனைத்துப் பெண்களுக்குமான அடையாளம் மோனிகா சிங்' என்றார். இது சீக்கிய மதத்தினருக்கு பெருமையான நாள் எனக் குறிப்பிட்டு ஹூஸ்டன் நகர மேயர் சில்வஸ்டர் டர்னர் தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் சுமார் 5 லட்சம் சீக்கியர்கள் வசித்து வரும் நிலையில் ஹூஸ்டன் நகரில் மட்டும் ஏறத்தாழ 20,000 சீக்கியர்கள் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொதுமக்கள் நீண்டகாலமாக பராமரித்துவரும் காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் காணி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்தும் இதுவரை காலமும் கிடைக்கப்பெறாமல் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வந்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இறக்காமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டலுடன் செயலக காணிப்பிரிவினால் விஷேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துரிதகதியில் பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் இனம்காணப்பட்டு அவர்களுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் குறித்த காணிகளுக்கு முறையான அரச அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட வரிப்பத்தான்சேனை - 03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, விசேட அதிதியாக அம்பாரை மாவட்ட காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஐ.எல்.இப்திகா பானு கலந்து கொண்டதுடன் இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல், கணக்காளர் றிம்ஸியா அர்சாட், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், நிருவாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமீல், கிராம சேவக நிருவாக உத்தியோகத்தர் எச்.பி.இந்திரசிறி யசரட்ண பண்டார, காணி உத்தியோகத்தர் என். எல்.எம்.மாஹிர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி. நிசம்மா உம்மா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.நிசார்தீன், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.





## 100 மில்லியன் டொலரை நிவாரண உதவியாக பாகிஸ்தானுக்கு ஒதுக்கிய அமெரிக்கா

பாகிஸ்தானில் பருவகால மழை பாதிப்புகளால் கடந்த ஆண்டில் அந்நாடு முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், சாலைகளும், பாலங்களும் முறையே துண்டிக்கப்பட்டும், நீரில் அடித்துச் செல்லப்பட்டன. நாட்டில் 3.3 கோடி பேர் வரை பாதிக்கப்பட்டனர்.

வெள்ளத்திற்கு பின்பு லட்சக்கணக்கானோர் பல்வேறு நோயால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 1.34 லட்சம் பேர் வயிற்று போக்காலும், 44 ஆயிரம் பேர் மலேரியா வியாதியாலும் பாதிக்கப்பட்டனர். வெள்ளம் பாதித்தோரில், 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தோல் வியாதியாலும், 101 பேர் பாம்பு கடியாலும் மற்றும் 500 பேர் நாய் கடியாலும் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் வெள்ள பாதிப்புக்கு 1,700க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கானோர் வெள்ள பாதிப்பில் காயமடைந்தனர். இந்த நெருக்கடியான சூழலில் உலக நாடுகளின் உதவியை பாகிஸ்தான் எதிர்பார்த்தது. இதற்கிடையே, பாகிஸ்தானின் வெளியுறவு மந்திரி பிலாவல் பூட்டோ சர்தாரி, அமெரிக்க வெளியுறவு மந்திரி அந்தோணி பிளிங்கனை வாஷிங்டன் நகரில் நேரில் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்புக்கு பின்னர், முதல் கட்டமாக பாகிஸ்தானின் வெள்ள நிவாரண மற்றும் மனிதநேய அடிப்படையிலான நிதி உதவியை அமெரிக்கா ஒதுக்கியது. இந்நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு மனிதநேய அடிப்படையில் மேலும் 100 மில்லியன் டொலரை உணவு பாதுகாப்பு உதவி தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.

## தென் ஆப்பிரிக்க வீரர் பிரிட்டோரியஸ் ஓய்வு




தென் ஆப்பிரிக்க அணியின் நட்சத்திர ஓல்ரவுண்டர் டுவைன் பிரிட்டோரியஸ். இவர் ஐபிஎல் தொடரில் சென்னை அணிக்காக ஆடி வருகிறார். 33 வயதான பிரிட்டோரியஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக இன்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு எனது கிரிக்கெட் வாழ்க்கையின் கடினமான முடிவு ஒன்றை எடுத்தேன். அது அனைத்து விதமான சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். எனது வாழ்க்கையில் தென் ஆப்பிரிக்கா அணிக்காக விளையாட வேண்டும் என குறிக்கோளுடன் இருந்தேன். அது எப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் கடவுள் எனக்கு திறமையையும் வெற்றிக்கான தீவிர விருப்பத்தையும் கொடுத்தார். மீதமுள்ளவை அவரது கைகளில் இருந்தன என்றார்.

இனி டி20 மற்றும் பிற குறுகிய வடிவத்திலான கிரிக்கெட்டில் எனது கவனத்தை திருப்ப உள்ளேன். இதைச் செய்வதன் மூலம், எனது தொழில் மற்றும் குடும்ப வாழ்க்கையில் நான் சிறந்த சமநிலையைப் பெற முடியும். எனது வாழ்க்கையில் பெரும் பங்கு வகித்த அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்றார். முன்னாள் கேப்டன் பாப் டு பிளஸ்சிஸுக்கு எனது நன்றி. முதல் முறையாக சர்வதேச அணியில் இருந்து என்னை விடுவித்த பிறகு மீண்டும் என்னை அணிக்குள் கொண்டு வந்தவர் மற்றும் என்னை ஆதரித்து சிறந்த வீரராக மாற்ற உதவியர் அதனால் நான் அவருக்கு மிகுந்த நன்றி சொல்கிறேன் என்றார்.

2016 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான பிரிட்டோரியஸ் இதுவரை 30 டி20 போட்டிகள், 27 ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் தென் ஆப்பிரிக்கா அணிக்காக விளையாடி உள்ளார். இரண்டு உலகக்கோப்பை தொடர்களில் தென் ஆப்பிரிக்கா அணியில் இடம் பிடித்துள்ளார். 2021-ம் ஆண்டு பாகிஸ்தானிக்கு எதிரான டி20 போட்டியில் இவர் 17 ரன்னுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இது தான் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் தென் ஆப்பிரிக்க பந்து வீச்சாளரின் சிறந்த பந்துவீச்சு ஆகும்.

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சி அம்பாறை மாவட்ட செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. நேற்று (9) கல்முனை மாநகர சபை தேர்தலுக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி சார்பில் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான செயலாளர் முஜாஹித், தவிசாளர் முஹம்மத் ரஷாத் ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தினர்.

இதன் போது ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஸ்ரீலங்கா தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான செயலாளர் முஜாஹித், தவிசாளர் முஹம்மத் ரஷாத் ஆகியோர் இம்முறை தூய அரசியல் கலாச்சாரம் ஒன்றினை முன்னெடுத்து மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டனர். இதேவேளை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.